Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)



CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 Click - 12
MARCH 2024 Re. 1

சங்க அலுவலகத்தில் மார்ச் மாதத்திற்கான ரினிவல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தவறாமல் தொடர்ந்து ரினிவல் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

- CVPA

# மிக்ஜாம் புயலின் போது ஏற்பட்ட பெரும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நமது கலைஞர்களுக்கு மாநில சங்கம் சார்பாக கம்ப்யூட்டர் வழங்கப்பட்டது.







கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு சென்னை ,தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் மிக்ஜாம் புயலின் போது ஏற்பட்ட பெரும் மழை காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த மூன்று மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு ஊர்களில் நமது கலைஞர்களின் பல போட்டோ ஸ்டுடியோக்கள் நீரில் மூழ்கி பலத்த சேதம் அடைந்தன. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த அந்த கலைஞர்களின் நலன் கருதி மாநில சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, திருநெல்வேலி தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் உடனடியாக கேமரா சர்வீஸ் முகாம் நடத்தி நீரில் மூழ்கிய கேமராக்களை பழுது பார்த்து கொடுக்க மாநில சங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இது தவிர பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கு உதவி செய்ய ஆர்வத்துடன் பல மாவட்ட சங்கங்கள் முன் வந்தன. உடனடியாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அந்த கலைஞர்களை மாநிலத் தலைவர் சிவகுமார் அவர்கள் நேரில் சந்தித்து ஏனைய மாவட்டங்கள் செய்த உதவியின் அடிப்படையில் அவர்களுக்கு கணினி மற்றும் சில உதவிகள் செய்யப்பட்டன. அந்த வகையில் நமது சென்னை மாவட்ட செயலாளர் திரு.பிரேம்குமார் அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மாவட்ட சங்க உறுப்பினர்களின் நிலை குறித்து மாநில சங்க அமைப்பாளர் திரு. சரவணன் அவர்கள், மற்றும் மண்டல செயலாளர் திரு.கவுஸ் பாஷா ஆகியோர் மூலமாக மாநில சங்கத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு ,நமது சங்க உறுப்பினர்களுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தார். இதன் அடிப்படையில் சென்னை மாவட்ட கோரிக்கையை ஏற்று, மாநில தலைவர் திரு.சிவக்குமார் மற்றும் மாநில நிர்வாகிகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னையை சேர்ந்த 3 உறுப்பினர்களுக்கு, 3 கணினிகளை மாநில சங்கம் சார்பாக சென்னை மாவட்ட சங்கத்திற்கு வழங்கி னார்கள். அதன் பின் நமது மாவட்ட சங்கத்தில் ஆய்வு செய்ததில், மழை வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட எம். நந்தகுமார், கே.கந்தவேல், பீ.சரவணன் ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களாக கண்டறியப்பட்டனர். இவர்களுக்கு, சென்னை மாவட்ட சங்க தலைவர் திரு .செல் செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற, செயற்குழு கூட்டத்தில் மாநில அமைப்பாளர் திரு. சரவணன், மாநில மண்டல -1ன் செயலாளர் திரு.கவுஸ்பாஷா ஆகியோர் முன்னிலையில் , சென்னை மாவட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கு கணினிகளை வழங்கினார்கள். இது தவிர மேலும் இரண்டு நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கும் உதவி செய்யுமாறு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## மாபெரும் CVPA கிரிக்கெட் போட்டி

அனைவருக்கும் வணக்கம்,

நமது சங்க உறுப்பினர்களிடம் உள்ள கிரிக்கெட் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் CVPA சார்பாக கிரிக்கெட் போட்டி ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது . கடந்த சில ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த கிரிக்கெட் போட்டி இம்முறை வரும் ஏப்ரல் மாதம் 6-7 தேதிகளில் கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது. இதில் பத்துக்கும் மேற்பட்ட அணிகள் பங்கு பெற உள்ளன.

இடம்: பெண்ணாத்தூர் சுப்ரமணியம் மேல் நிலைபள்ளியின் வளாகத்தில் அமைந்துள்ள மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருக்கோவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது. கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசு 15000, இரண்டாம் பரிசு 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது. நமது சங்க உறுப்பினர்களுக்காக நடைபெறும் இந்த கிரிக்கெட் போட்டியை காண, சங்க உறுப்பினர்களாகிய உங்கள் அனைவரையும் பார்வையாளர்களாக கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

மேலும் கிரிக்கெட் போட்டி குறித்து விபரங்கள் அறிய நமது சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் குழுவை தொடர்பு கொள்ளவும்.

விஜய்:+919444292035 மதிவாணன் : 9884111155 ராஜன்:+919710251451
ரகு:+919444113871 ஹரிஹன்(எ)பழனி +919884411565

# செயற்குழு தீர்மானங்கள்

கடந்த 23-03-2024 சனிக்கிழமை அன்று மதியம் 02.00மணி அளவில் நிர்வாகக் குழு கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.. அதனைத் தொடர்ந்து ★அன்று மாலை 04.00 மணி அளவில் சென்னை எஸ்.வி.எஸ் கிளப்பில் கூட்டம் , தலைவர் செல். செ ல்வம் தலைமையில் நடைபெற்றது. அங்கு எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது .

1. மதிய சென்னை மற்றும் தென் சென்னை எஸ் -1 ஆகிய பகுதிகளுக்கு மே மாதம் 8 - 9 ஆகிய தேதிகளில் கேனான் ஒர்க் ஷாப் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

2. சமீப காலமாக பிரபலமாகி வரும் AI டெக்னாலஜி மற்றும் சோசியல் மீடியா குறித்து ஒரு ஒர்க் ஷாப் நடத்த தீர்மானிக்கப்பட்டது. இதற்கு மிகக் குறைந்த நுழைவு கட்டணமாக 250 ரூபாய் உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. மிக்ஜாம் புயலின் போது ஏற்பட்ட பெரு மழை காரணமாக வாழ்வாதாரம் இழந்த நமது கலைஞர்களுக்கு மாநில சங்கம் சென்னை மாவட்ட சங்கத்திற்கு மூன்று கம்ப்யூட்டர்களை கொடுத்தது. அதனடிப்படையில் எம். நந்தகுமார், கே.கந்த வேலு, பீ.சரவணன் ஆகிய மூவருக்கும், மாநில அமைப்பாளர் சரவணன், மாநில மண்டல செயலாளர் கவுஸ்பாஷா ஆகியோர் முன்னிலையில், இவை வழங்கப்பட்டது. நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் உடன் இருந்தார்கள்.

4. மாநில சங்கம் நடத்திய இரண்டாவது டிஜி மீடியாவில் சென்னை மாவட்ட சங்கத் திற்கு வரவேண்டிய ஒரு லட்ச ரூபாய் பாக்கி தொகையை, மாநில அமைப்பாளரும் மண்டல செயலாளர் இணைந்து பெற்றுத் தருவார்கள். அப்படி வரவில்லையென்றால் அடுத்து நடைபெற உள்ள டிஜி மீடியாவில் நமது சங்கத்தின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பது அந்த நேரத்தில் நடத்தப்படும் செயற்குழுவில் முடிவெடுக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5. நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக, அனைத்து உறுப்பினர்களுக்கும் நலவாரியத்தின் விண்ணப்ப படிவம், நல வாரியத்தில் இணைந்தால் கிடைக்கப்பெறும் பயன்கள் போன்றவை தபாலில் அனுப்பி வைக்க செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டது.

6. நடைபெற உள்ள கிரிக்கெட் போட்டிக்கு ஆர்வமுள்ள ஸ்பான்சர்களை அவரவர்களுக்கு தெரிந்தவர்களிடம் இருந்து கேட்டு பெற்று தர வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டது.

7. மாநில சங்கம் வழங்கிய கம்ப்யூட்டர் மூன்று நபர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேலும் பாதிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள், உதவி கேட்டு சங்கத்தை நாடியுள்ளனர். அவர்களுக்கும் இரண்டு கம்ப்யூட்டர் வழங்க வேண்டும் என்று மாநில அமைப்பாளர் மற்றும் மண்டல செயலாளர் ஆகியோர் மூலமாக இவர்கள் இருவருக்கும் உதவி கேட்கப்பட்டுள்ளது.

8. நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலுக்கு வீடியோ பணி செய்வதற்கான டெண்டரில் மாநில சங்கமும், ஏனைய மாவட்ட சங்கங்கங்களும், இடம் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொண்ட போது, இதற்கு தேர்தல் ஆணையம் விதித்துள்ள விதிமுறைகளுக்கு உட்படாத காரணத்தால் மாநில சங்கமும், மாவட்ட சங்கங்களும் இந்த டெண்டரில் கலந்து கொல்லவில்லை. டெண்டரை எடுத்த எந்த வொரு தனி நபர்களும் மாவட்ட சங்கங்களையோ, மாநில சங்கத்தையோ அணுகவில்லை என்கிற தகவலை செயற்குழுவில் சொல்லப்பட்டது.

9. அறக்கட்டளை அமைப்பதற்கான அனைத்து பணிகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. சட்ட ஆலோசகர் கேட்ட அனைத்தும் அவரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பதிவுத்துறையில் அறக்கட்டளையின் பெயர் CVPA என்கிற பெயருடன் டிரஸ்ட் (CVPA TRUST) என்கிற வார்த்தை சேர்த்து எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பெயருக்கு பதிவு அலுவலர் அனுமதி கிடைத்தவுடன் முறையாக அனைவருக்கும் தெரிவிக்கப்படும் என்று செயற்குழுவில் தகவல் தெரிவிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட உள்ள இந்த டிரஸ்டுக்கு வியாபாரிகளையும் இணைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

10. நடைபெற உள்ள கிரிக்கெட் போட்டிக்காக அமைக்கப்பட்ட குழுவில் விஜய் , ராஜன், ரகு, ஹரிஹரன் என்கிற பழனி ஆகிய நான்கு பேர் கொண்ட குழுவை அமைத்து கடந்த செயற்குழு முடிவெடுக்கப்பட்டது. தற்போது நடைபெற்ற செயற்குழுவில் கிரிக்கெட் போட்டிக்காக இந்த குழுவில் ஐந்தாவது நபராக மதிவாணன் அவர்கள் தன்னை இணைத்து கொண்டார்.

11.நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானபடி ஒரு பகுதிக்கு குறைந்தபட்சம் 25 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் . 25க்கும் குறைவான உறுப்பினர்கள் ஒரு பகுதி இருக்கும் பட்சத்தில், அந்த பகுதிகள் தேர்தலுக்கு முன்பாக பக்கத்தில் உள்ள பகுதியின் பின்கோடுகளோடு இணைத்து செயல்பட வேண்டும். இதே போல அதிக உறுப்பினர் உள்ள பகுதிகளை இரண்டாக பிரித்து புதிய பகுதிகள் உருவாக்கப்படும் என்பதும் பொதுக்குழு தீர்மானம் ஆகும். இதன் அடிப்படையில் தேர்தலுக்கு முன்பாக சீர்திருத்தம் செய்யப்படும் என்று செயற்குழுவில் நினைவூட்டப்பட்டது.

12. நல வாரியத்தில் ஆன்லைனில் பதிவு செய்வதற்காக, அறிவிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தென் சென்னை எஸ் -2 துணை தலைவர் ஜெயக்குமார், வடசென்னை இணை செயலாளர் பிரபா, மற்றும் திருவொற்றியூர் பகுதி செயலாளர் மேகநாதன் ஆகியோர் ஆன்லைன் பதிவு செய்பவர்களாக செயற்குழு ஒப்புதலுடன் அறிவிக்கப்பட்டுள்ளனர். சங்க அலுவலகத்திலும் ஆன்லைனில் பதிவு செய்து கொள்ளலாம், என்று அறிவிக்கப்பட்டது.



## வருந்துகிறோம்

தென்சென்னை, தாம்பரம் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர் எஸ்.எஸ் ஸ்டில்ஸ் உரிமையாளர் திரு.ஆர்.எஸ். ரமேஷ் அவர்கள் மாரடைப்பின் காரணமாக, மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை நமது சங்கம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். நமது சங்க நிர்வாகிகள் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின், நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 10,000 (ரினிவல் அடிப்படையில்) அவருடைய வாரிசுதாரிடம் முறையாக வழங்கினார்கள்.



## வருந்துகிறோம்

தென்சென்னை, எம்.ஜி.ஆர் நகர் பகுதியை சேர்ந்த, நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர், சுரேஷ் டிஜிட்டல் வீடியோ உரிமையாளர் திரு.இ.சுரேஷ் அவர்கள், அகால மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை நமது சங்கம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். நமது சங்க நிர்வாகிகள் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின், நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 30000 ரூபாயை (ரினிவல் அடிப்படையில்) அவருடைய வாரிசுதாரிடம் முறையாக வழங்கினார்கள்.



## வருந்துகிறோம்

தென்சென்னை எஸ்-2, கிழக்கு தாம்பரம் பகுதியை சேர்ந்த, நமது சங்கத்தின் ஆரம்பகால மூத்த உறுப்பினரும், முன்னாள் பகுதி செயலாளருமாகிய ஆயுட்கால உறுப்பினர், திரு.சீ.பீ. ராமச்சந்திரன்அவர்கள், உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தநிலையில் அவரது உயிர் பிரிந்தது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை நமது சங்கம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். நமது சங்க நிர்வாகிகள் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின், நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 30,000 ரூபாயை (ரினிவல் அடிப்படையில்) அவருடைய வாரிசுதாரிடம் முறையாக வழங்கினார்கள்.

# வடசென்னை பகுதியில் உள்ள CVPA உறுப்பினர்களுக்காக கேனான் நிறுவனம் சார்பில், நேரடியாக நடைபெற்ற பயிற்சி வகுப்பு


















# தென்சென்னை எஸ்-2 பகுதியில் உள்ள CVPA உறுப்பினர்களுக்காக கேனான் நிறுவனம் சார்பில், நேரடியாக நடைபெற்ற பயிற்சி வகுப்பு
























வடசென்னை, திருவொற்றியூர் பகுதியை சேர்ந்து நமது சங்க உறுப்பினர் சக்தி ஸ்டுடியோ திரு.ராஜா அவர்களின் மகள் காவியா – ரஞ்சித்குமார் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள் .



நமது சங்க உறுப்பினர் கோபால் அவர்களின் மகன் கவினேஷ் தனது முதலாவது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடினார். சங்க நிர்வாகிகள் நேரில் சென்று குழந்தை கவினேஷை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை பட்டாளம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. தமிழ்வாணன் அவர்களின் மகள் விவிக்ஷா தனது முதலாம் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடினார். நமது சங்கத்தின் சார்பில் சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும், ஏனைய சங்க உறுப்பினர்களும் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு குழந்தை விவிக்ஷாவை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை நுங்கம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் திரு. எம். சிவக்குமார் அவர்களின் மகன் யாபேஷ். இவர் சென்னை சேத்துப்பட்டில் உள்ள யூனியன் கிறிஸ்டியன் பள்ளிக் ஸ்கூலில் ஆறாம் வகுப்பு படித்து வருகிறார். யாபேஷ் கடந்த மாதம் கோயம்புத்தூர் ஸ்ரீ சக்தி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜியில் நடைபெற்ற ரோபோடிக் போட்டியில் கலந்து கொண்டார். விவசாயத்தில் புத்துயிர் அளிப்பது என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட போட்டியில் மாநில அளவில் வெற்றி பெற்றார். அதற்கான கோப்பை மற்றும் சான்றிதழ் இந்த அமைப்பின் மூலம் பெற்றார். மாணவன் யாபேஷை நமது சங்கம் சார்பாக பாராட்டி வாழ்த்துகிறோம்.



நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் திரு. சிவானந்தம் அவர்களின் மகள் யாழினி–அஜய் குமார் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகளும், ஏராளமான சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது CVPA சங்கத்தின் வடசென்னை சௌகார்பேட்டை பகுதி உறுப்பினர் திரு.திலக் (ராசி ஸ்டுடியோ) அவர்களின் மகளின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் செயலாளர் திரு பிரேம்குமார் பொருளாளர் திரு பாலு வடசென்னை துணை தலைவர் அ.கௌஸ் பாஷா இணை செயலாளர் திரு . பிரபாகரன் மத்திய சென்னை இணைச் செயலாளர் திரு .கோட்டி சௌகார்பேட்டை பகுதி செயலாளர் திரு.ஹரி ஆயிரம் விளக்கு பகுதி செயலாளர் திரு . சண்முகம்சு கொடுங்கையூர் பகுதி செயலாளர் திரு ★ரமேஷ் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய தருணம்

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukttharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351